உ

கடவுள் துணை.

[illegible] ALAGACON
HUSKISSON STREET
TRINCOMALEE

## பீ. எம். செல்லையா

அவர்களாலியற்றிய

# கதிரை மகுத்துவமும்

இலங்கைத் தேயிலைத் தோட்ட

# வழிநடைப்பதமும்

இதிலடங்கி யிருக்கிறது.



முதற் பாகம்

கண்டி, புரௌன்ரிக் வீதி 3ம் நிம்பரில்
ஸ்தாபித்திருக்கும்
" பீர் " அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை) 1931 (சதம் 25

உ

கடவுள் துணை.



## சுப்பிரமணியர் பேரில்

# கதிரை மகுத்துவம்.

## முதற் பாகம்.

### விநாயகர் காப்பு.

சீர்புகழும் திருமாயன் திருவடிசிரமேற்கொண்டு
யேர்புகழ வழிநடைப் பதமதனைப் பாடுதற்கும்
பார்புகழும் - தேவரடிபணிந்தேன் போற்றி
ஊர்புகழுங்கரிமுகத்தோன் னிருபாதங்காப்புதானே.

### சுப்பிரமணியர் விருத்தம

ஆறுமுகவடிவேலா உனதருளை அடியேன்கண்டு
கார்மேவுங் கதிர்மலையைக் காண்பதற்கு - ஆவல்
கொண்டு சீருடனே கவிபாடி நடனமாட
ஜெயம்தருவாய் உமதுபாதம் தெரிசித்தேனே.

## ஆசிரிய விருத்தம்.

பார்புகழும் சீலனே மாமசிவன் பாலனே
பழனிமாமலை வேலனே பாவிநான்படுந்துயரம்
துலையாத விசனத்தால் உன் பாதத்தில் வீழ்ந்தழுவனே
பத்துமாதம் சுமந்துபெற்ற தாய் எந்தனை
பகைத்ததை நினைத்தழுவனே, பார்புகழ தன்பிதான்
சீருடன் வளர்த்திட்ட பக்குவத்திற்க் கழுவனே,
பாதிவயதிலென்னைப் பிதாவானவர்விட்டுப்
பரகெதி சேர்ந்ததற்க் கழுவனே
நீதியுடனே அரசுசெய்திடும் வேளையில்
தன் நிலமை நினைத்தழுவனே, நிந்தனைகள்
செய்தென்னை அரசுக்குள் வெளியாக்கி
நீக்கினதற்க் கழுவனே, வாதியாய்ப் பிறவிகள்
வழக்கிட்டு அவர்செய்த வருமையை நினைத்தழுவனே
வாங்கினகடன் கேட்டு வணிகர்கள்கொண்டுவைத்த
வாரண்டு கண்டழுவனே, வையகமெல்லாம் புகழ
மெய்யாய் நான் வாழ்ந்த வாழ்வை நினைத்தழுவனே
வழக்கின்மேல் வழக்குகள் வந்ததும்
நொந்ததும் தன் வருத்தத்தை நினைத்தழுவனே
வகையானமக்களும் மனைவியும் தனக்காக
வருந்துகிறதற் க் கழுவனே, திசைபோன
வேலையில் விஷசர்ப்பம் எந்தனை தீண்டினதற்க்கழுவனே
தெய்வமே தனக்கிந்த துயரங்கள் தந்ததால்
சிந்தையும் தடுமாருதே, மெய் என்று
உந்தனைச் சதமென்று நம்பினேன்
வேறு ஒரு துணை இல்லையே, அய்யனே
மெய்யனே துய்யனே இவ்வேளை
ஆதரித்தென்னை ஆளுவாய், அண்டர்தொழு தீண்டனே
அருமறைகள் நாதனே எங்கும் அற்புத வடிவேலனே.

# கதிரை மகுத்துவம்.

(ஷண்முகா என் யின்னும்சோதனையா என்றமெட்டு)

1 ஷண்முகா என் இந்தச்சோதனை என்னால்
சகிக்கமுடியு நில்லை வேதனை (ஷண்)

2 முன்ஜென்மத்தி லென்ன செய்தேனோ தெரியாது
முழுதும்உமக்குத் தெரியாதேது புவிமீது (ஷண்

3 என்னேரமும் உன்னைக்கெஞ்சி
இருக்கிதேன் மனம் அஞ்சி
விண்ணுலகில் உன்னை அல்லால்
யாரும் ஜெயிப்பாரோ மிஞ்சி (ஷண்)

4 பகைவரானாலும் தன்னை பாராதிருக்கலாமா
பட்சம்வைக்காமல் என்மேல் கச்சிகட்டலாமா
இகத்தில் இப்படிக்குறை எதேனும் செய்யலாமா
எனக்குநீ அருள்செய்தால் உனக்கொருகுறையாமா (ஷண்)

5 சஞ்சலமாகியே விலைசெய்தோர்க ளிருந்தாலும்
நெஞ்சைப்புண்ணாய் நொந்து கெஞ்சார்கள்
ஒருபோதும் அஞ்சலி செய்கிறேன்
ஆதரித்தென்னை ஆளும் அய்யனே மெய்யனே
அந்தஅமரர் பதியில் வாழும் (ஷண்)

6 தொல்லைவினையகல தொழுதேன் நமஸ்கரித்து
துயாருப்பாய் கார்த்து சோர்பினேன் முகம்பார்த்து
இல்லையென்றாலும்நிதம் இருப்பேன் உன்வழிபார்த்து
செல்லையா பதப்பார்த்து ஜெய கருவாய்கார்த்து [ஷ]

(அம்பிகா உன்மகன் குகன் என்றவர்ணமெட்டு)

1 சாமி என்னை ஆளும் ஈசா
தாமிதமேன் முருகேசா (சாமி)

2 பூமிபுகழ் ஞான மூர்த்தி
சாமியே உன் மனப்பூர்த்தி
ஏழை அறிவேன் கீர்த்தி
எந்தன் துயர் தீர்த்துக் கார்த்திர் (சாமி)

3 மாதரால் யினங் குலைந்தேன்
மக்களால் ஞானம் கலைந்தேன்
வேதனையால் பாதம் பணிந்தேன்
விட்டுக் கெட்டென தெரிந்தேன் (சாமி)

4 காரு வேரு துணை முருகா
காணேன் முகம் பார் முருகா
பாராமலே யேவுந் முருகா
பார்த்து துயர் தீரும் முருகா

5 செல்வமாலை மணி பூண்டவா
செல்லையா சொற்பிழை யாண்டவா
மயி லேறிய தாண்டவா
மனம் சோதித்த ஆண்டவா (சாமி)

கதிரை மருத்துவம் முற்றிற்று.

# இலங்கை தேயிலைத் தோட்ட

# வழிநடைப்பதம்.

## ஆசிரிய விருத்தம்.

வாசமிகு கொன்றை மலர் மேனிதனிலணிகின்ற
வள்ளலைத் தினம் பணிகுவோம்
மந்தாரை யிருவாட்சி பாரிசாதந்துளசி மட்டிலகு
வெட்டிவேர் செவ்வந்தி நந்தியா
வட்டமொரு செம்பரத்தை
மலர்ந்த செங்கழுநீர் புன்னை பன்னீர் வில்லம்
மலர்முகமான மயிலே தேசாசர் புகழ்கின்ற
திருமுக விலாசமே செய்வேன் உந்தனுக்கு
எந்நிலையே இவ்வுலகத் தேசங்களிற் சிறந்த
இலங்கை யெனப் பெயர் பெற்றதாய் அதில்
இந்தியர்கள் வெகுகோடி புகழ் பெற்றிருப்பதால்
ஏகுவோம் நாமள் அங்கு காராருங் குணத்தோரை
கதித்தபேரைக் கற்றவரை மற்றவரைச்
சுற்றத்தாரைக் கண்டுகொள்ளக் காதலியே
இயன்றோடு வழி நடந்து கண்டு சில அற்புதங்கள்
பார்த்துநீயும் ஆதியென்ற திருமூர்த்தி ஐயன்பாதம்
அனுதினமும் நமஸ்கரித்துத் தொழுவோம் நாமே.

## அற்புதமென்னும் விதையை நாட்டினார் என்ற மெட்டு.

1 இலங்கைத்தேயிலை தோட்டம்தேடினார்
பீ. எம். செல்லையா
இந்தியர் துயரம் தீரப்பாடினார் அவர்கள்
எங்கும் ரித்து பங்கம்அடைந்து
ஏவல்புரிந்திடும் ஆவல் ஒழிந்திட இல

1 எங்கும் கூலிகள் சங்கங்கூட்டினார் சகலதேச
ஏழைகள்க்கிந்த அறிவையூட்டினார் அவர்கள்
இனிமேலாகிலும் தனிமையாகியே
இருந்துகைத்தொழில் புரிந்திடும்படி இல

3 ஜனங்களின் துயர் தணியதேற்றினார் தர்ப்பாரைவேண்டி
தாணியில்பாவத் தொழிலைமாற்றினார் என்றும்
தாசர்நாட நேசர்கூட
சகலதேச வாசர்பாட இல

4 இந்தியமுறையின் வழியைக்காட்டினார் செந்தமிழ்ககர்
எங்கும்மகாத்மா ஒளியைநாட்டினார் அவர்
எங்கும்ஞானி யேசுப்பிரதானி
சங்கம் புகழும் தவக்கலைக்கியானி இலங்

## 8 இலங்கை தேயிலைத்தோட்ட வழிநடைப் பதம்

ராஜ ராஜ ராஜ ராஜரே. (என்ற வர்ணமெட்டு.)

1 இலங்கைத் தேயிலைத் தோட்டங்கள் பார்க்கலாம்
இளமயிலேதான் பின்வாராய் அதில்
இந்தியநேசர்கள் வேலைசெய்வார்காண
யேகுவோம் நாம் அங்குநேராய் இல

2 நாளத்தனித்தியுன் சரிகைகட்சனி
தாமதமென்ன நடந்திடக்கண்மணி
காலிர்ச்சிலமணி கொஞ்சிட உன்
காலிற்பலமணி மிஞ்சிட இல

3 எண்டிசையும்புகழ் கண்டிநகர்க்கேகும்
ஏகாந்தரோட்டில் கைகாட்டி இதில்
இருந்து ஆரைக்கட்டை இருக்குதென்
றெழுத்தைபாரு சீமாட்டி வண்டிகள்
அந்தனம்செல்லுது பாரிதோ மாதே
கல் கணைக்கேகும் பாதை இதோ நாமள்போகும் இல

4 செப்புவேன் கேளிதோ லெப்பைக்கடையதை
செல்விழியாளே கண்பாராய் எந்தன்
தேவியே சிங்களக் குசவன்வீடிதோ
சேர்ந்தோம் பவுன் கடைநேராய்
தங்காதேவா இங்கு ஏழாங் கட்டைவந்தோம்
காரோ ஓடுது மோட்டக்கார் மானேஇதோரோட்டில்பார் இ

5 நாயகமேயெட்டி நடந்துவாயிதோ
ரயிட்டர் பங்களாஓடு ரோட்டை
நாகரீகஞ்செய்யும் ஜனங்களுக்கென்று
ராஜாங்கத்தார் செய்தவீடு

நாயகமே இந்த அம்பலந்தாண்டினேம்
தங்கமேஇந்தக்கடையது சிங்களவர்குடையது இல
6 ஒன்டோடியேஎட்டி நடந்துவா இந்த
ஒப்புசர் பங்களா நேரே எந்தன்
ஒவியமேயிந்த சாலையிலேகுவோம்
ஒய்யாரமாயிருபேரே கண்டதோர்
சிங்களநாட்டார்கள் கூட்டத்தை என்
காதலியேகண்ணல்டாரு கமுகொடுதென்னே
போர்புரிந்து கலந்திருப்பதேசீரு இல

7 புத்தமிர்தே எட்டி நடந்துவா இதோ போகும்வழி
இதுநோரய்என்தன் பொற்கொடியேசில
அல்பிஜிலாமாம் பூத்திருக்குதே ஜோராய்
முத்துமுனியாண்டி கோவிலைப்பாரிதோமுற்றிலும்
உனைநம்பினேன் நான்நற்றித்துணைச்செய்யவா எனவே இ

8 சுத்திநமஸ்க்கரித்தே எனை துதிசெய்துதோகையரேவாடிசெல்ல
சோமன் உதித்தார்ப்போல் தோணுவார்
வாத்தியார் சொல்லிவா வந்தனமெல்ல
கண்டஉடன் நம்மைவாவென்றழைக்கிறார்
கண்மணியேஇவர்நல்லவர் வெகுகல்வித்திரமையில்வல்லவர் இ

9 எங்கும் புகழ்பெற்ற ரெங்கசாமிவாத்தியிருக்கும்
மாளிகைபாராய்அவர் என்னமோநம்மவாவென்றழைகிறார்
எகுவோம் நாம்அங்கு நேராய்
வாடியென்கண்ணேநாம் டீயும் அருந்துவோம்
வாழைக் கனி மா விளநீர் வேலைக்கிதுதான் நலநீர் இல

10 முட்டாயி தேன்குழல் முறுக்குடன் லட்டு
மொய்குழலேருசிபாருளந்தன் மெல்லியேடையுடன்பாலோடு
சர்க்கரைவேண்டும் மட்டும்பசியாரு
தட்டாமல் எழுந்து கைகாலலம்பிக்கொள்
தங்கமேயிந்தவாசனையை அங்கமெல்லாம்பூசுநீயே. இல

11 புத்தமிர்தம் பெருக்கோடுவதைப்போல போகுது பாரிந்த
ஆருளந்தன் பூமியிலே எங்கும் தேயிலை கொக்காவும்
பூத்திருக்குதேசிரு நாயகமே ஜனக்கூட்டங்களாய்க்கூடி
நத்தியே வேலை செய்வதைப்பாரு
புத்திகள் சொல்லுவோம் மருசிரு இலங்

1 இந்தியதேசர்கள்க்கு எண்யிந்தசிரு
அவல்புரிந்துவேலை செய்வதைப்பாரு
தினம் சிந்தைகலங்கியே நித்திரையில்விழுந்து
சீருடனேகோழிகூவும் வேளையில்எழுந்து
ஆறுமணிக்கு தப்பு அடிக்கும்சத்தம்கண்டு
பேர்எடுத்திடுவான் பிந்திடலாகாதென்று
நெஞ்சம்மிகப்பதரி கஞ்சிகுடித்திடாமல்
பஞ்சாய்பறந்தோடி சஞ்சலமாய்வாடி
கொஞ்சம் கூலிக்காக நாலுமணிவரைக்கும்
கூடினவேலைசெய்து வாடியேவருந்திரார் இந்தி

2 சங்குஊதினவுடன் மங்கையர் ஆண்மக்களும்
வருங்கோலம் அதைக்கண்டு வயர் அரியுதே இன்று

ஆறுமணிவரைக்கும் பாடுபடுகிறார்
அங்கம்உருகிப்பின் வீடுவருகிறார்
வீட்டுக்குவந்து சாபாட்டிற்குவேண்டிய
ஆக்கும்பதார்த்தங்கள் சீக்கிரம்கிடைக்காமல்
கெஞ்சிக்கூத்தாடிநின்று கேட்டுவாங்கிப்பொங்கித்தின்று
கொஞ்சுங்குழந்தையுடன் சஞ்சலநித்திரைசெய்கிறார் இந்தி

3 முதல்தப்பு அடிக்கயில் முளித்து எழுந்து
முகங்கால்கைகழுவியே குழந்தையையெடுத்து
பால்கொடுத்துத்தொட்டியில் கிடத்தியேவிடுத்து
காலையில்மலையேறி வேலைசெய்யும்போது
பேணிவளர்த்திட்ட பிள்ளையின் நினைவாகி
அழுதிடுமென்றனள் பொழுகாஉருகியே
வெட்கக்கேடான பிழைப்பு பிழைப்பதால்
துக்கங்கள் மேலாகி துயரப்படுகிறார் இந்திய

4 மாதம்முடிந்தஉடன் சம்பளம் வாங்கி
வாங்கினகடன் கொடுத்து வயசெரியஏங்கி
பித்தாலைச்சல்லீகூட மிச்சமில்லாமலே
நித்தம்நித்தம் அழுதுகண்ணீர் நீராய்வடிக்கிறார்
பிழைக்கும் பிழைப்புகளை வெளிக் கிடாமலே
பேராசைகொண்டுநின்று வேரேயிடம்போவோமென்று
சட்டிபானைகளும் மற்ற தட்டுமுட்டுசாமான் தூக்கி
குட்டிகுழந்தையுடன் கூட்டமாய் போகிறார் பாவம் இந்தி

## விருத்தம்

சுத்திவந்து இவ்வளவுதூரம் நின்றோம்
சுதேசியர்கள் படுந்துயரம்கண்ணால் கண்டோம்
சித்திபெற நேசர்களுக்கு திருமாயனருளினாலே (மே
இத்தலத்தில்புத்திசொல்லிஜெயமடைய வியம்புவோ

முன் ஸ்ரீராமச்சந்திரனே பின் சந்திரத்திலொண்டியாக
சித்திரவள்ளியே (என்ற வர்னமெட்டு)

1 இந்தியாதேசம்இருந்து வந்தசகோதரரே
ஏழையாபோகாதீர்கள் கூலிவேலைசெய்து
ஏமார்ந்து போகாதீர்கள் இந்தி

2 சொந்தமானஊரைவிட்டுச் சுதேசிஎன் னும்பேருப்பட்டு
கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டீரே
நம்மள்பெயரைக் கக்கூசில் எழுத விட்டீரே இந்தி

3 வந்துஉங்களைஅழைத்து வளவுபோல்விடுதந்து
செலவுக்குக்காசுகொடுப்பான் கொடுத்தபின்பு
செருப்பால் தலையிலடிப்பான் இந்

4 காலையில் ஆறுமணிக்கி வேலைக்குவாங்களென்று
கங்காணிசொல்லி விட்டாரே
அறிவில்லாத கழுதைபோலாக்கிவிட்டாரே
மாலையிட்டுத்தாலிகட்டி வேலைசெய்யக்கூட்டிபோய்
மதியைக்கொடுத் துவிட்டீரே
நம்மளுடைய மார்க்கத்தைமறந்துவிட்டீரே இ

5 சொந்தமானவூரிலேபோய் இந்தவிதம்நாம் உழைத்தால்
சோறுதிங்கவழியில்லையா உடுத்திக்கொள்ள
சொகுசாக வேஸ்டியில்லையா
கந்தாமுருகாவென்று நாட்டுக்கோட்டைசெட்டியாகள்
காசுபணம் தேடவில்லையா
அதை நாங்கள்கண் இருந்தும்காணவில்லையா இந்

6 சத்தியுடன்வேலைசெய்தால் பலேகெட்டிக்காரனென்று
சம்பளம்போட்டுக்கொடுக்கிறார் அந்திக்குஅந்தி
சரி என்று பேரொடுக்குறார்
குந்தி இருந்துகாச்சல் குளிர்வந்துநடுக்கையில்
கோவென் டேமியாபூல் யெங்கிரார்
கங்காணிகாசை கொடுத்திட்டுபோவென்குரூர் இந்

7 ஊருக்குஉழைத்துநம் வீரத்தைக்குறைத்தால்
ஒருநாளும்சுகமில்லையே கடவுளென்னம்
ஊக்கம்கொள்ள நேரம்இல்லையே
பாருக்குள் இருந்துகெட்ட பாதையில்தடுமாருமல்
சீரானவழியில்லையா வயிர்வளர்க்க
செய்தொழில் நமக்கில்லையா இந்தி

8 எங்கள் ஊரில்மழை இல்லையெப்போதும்பெருந்தொல்லை
என்றுசொல்லி இங்கேவந்தீரே
வந்தபின்புஇந்துமத சாஸ்த்திரமுறை தவறியேநடந்து
இங்கிலீஷ்வே சமாநீரே தங்களிடம்பெண் இருக்க
வேரேஇடம் நேசமாகி அங்கங்கெட்டுப்போகாதீர்கள்
நம்மள்சொந்தஊரை ஆகாதென்றுதள்ளாதீர்கள் இந்

9 காசுக்காக ஆசைப்பட்டு    நாயைப்போலவேசம்போட்டு
கண்டபலன்    ஒன்றும் இல்லையே
இறக்கும்போது    கொண்டுபோவதொன்றுமில்லையே
மோசக்காரக்கங்காணிகள்    பாசத்திலேவிழுந்து
ஈசனைமறக்காதீர்கள்    உங்கள்பிள்ளைகட்கு
இந்தவழிகாட்டாதீர்கள்    இந்

10 வம்பான பாடுபட்ட    சம்பளத்தின்காசைவாங்கி
தெம்மாங்குப்பாட்டுப்பாடுரீர்    கள்ளைக்குடித்து
தெருவழி நின்று    ஆடுரீர்
கம்பராமாயணம்போல    கதைசெல்லிப்படித்தீரே
கடைத்தெரும்வழிவிட்டு    கடவுளைமறந்தீரே    இ

11 இந்தவிதம்சொன்    னேனென்று
என்பேரில்கோபங்கொண்டு    விக்கையாய்ப்பேசாதீர்கள்
நான்சொன்னசொல்லை    வீண்ணென்றுதள்ளாதீர்கள் இ

12 இந்தவிதம்தோட்டக்காட்டு    ஜனங்களுக்கெப்போதும்
எள்ளளவும்    புத்தியில்லையே
ஊருக்குழைத்து    இருப்பதும்பெருக்கதல்லையே
இந்தஊரில்சிங்களவர்    எந்தஊரில்போய்ப்பிழைத்தார்
அவர்கள்இந்துமதத்    தாரில்லையா
அவர்கள்செய்த    எர்ப்பாட்டைக்காணவில்லையா இந்

13 மாதமாதம்காலுநாளில்    வேலையைதிருத்திக்கொண்டு
மார்க்கப்படி    நடக்கிறார்
கடவுளைமன்றாடிப்    பாவம்போக்கிறார்

எதாவதொன்றுசெய்ய இடம்நமக்கில்லையே
எந்தநாளும்கஷ்டப்பட்டு இன்னும்புத்திவரவில்லையே இக்

14 ஆதிபராபரமாகிய கடவுளை அனுதினம்
துதிசெய்யுங்கள் நீதிவாக்கியப்படி
ஏகாதசிவிரதம் நின்றுபாவம்போக்குங்கள்
அடிமைத்தொழில்புரிந்து இருந்தாலும்குற்றமில்லை
கடவுளருளைக்கண்டு நாடுங்கள் அறிந்து
பி. எம். செல்லையா தெரிந்துசொன்னகவியை
ஆனந்தமென்று பாடுங்கள் இந்தி

## விருத்தம்

மாங்குயிலே பூங்கொடியே மானே தேனே
மாநிலத்தில் கள்க்குடித்த மடையரெல்லாம்
மதிமயங்கி மதிப்பிழந்து மல்புரிந்து மனைவி
யோடே தாங்காத அனுவத்தால் பெருமை
பேசித்தள்ளாடி விழுவதை நீ கண்ணுல்பாராய்

## தோட்டத்தில் வசிக்கும் ஆண்பெண் தர்க்கம்

வாருங்காணும் வளையல்ச்செட்டி. (என்ற மெட்டு)

1 நித்தம்நித்தம்புத்திசொன்னேன் நினைவைமறந்தீரே
பெ— கள்ளைநித்தம்குடித்தீரே உந்தன் பல்லைக்கடித்தீரே

நிந்தித்தென்னைப்பேசினதால் நீங்கிடுவேன் பாரே

2 வருத்தப்பட்ட பணத்தைப்போட்டு வாங்கிக்குடித்தேனே
ஆண். கள்ளைவயர்நிரையகானே நீவையாதடிமானே
உன்வாயைமூடிபேசாதிரு வைப்பேன்பூசைநானே

3 ஆக்கித்தின்ன அரிசியில்லை அறிவுகெட்டமாடா
பெ—நீ ஆண்பிள்ளையாமூடா உன்னை ஆர்மதி பார்போடா
நான்ஆசைவைத்து தேடிவைத்த காசகையில்தாடா

4 வம்புத்தனம்பேசாதடி உன்வாயைக்கொஞ்சம்மூடு
ஆண். இனிவந்திடுமேகேடு ஒருவயதுப்பயலைத்தேடு
உன்னைவளர்த்தெடுத்த தாய்தந்தைக்குவாயில்மண்ணைபோடு

5 தாய்தகப்பனைப்பேசாதடா தட்டுக்கெட்டநாயே
பெ- சீ பட்டுப்போவாய்நீயே கேடுகெட்டகாட்டுப்பேயே
வாய்மதத்தினால் என்னைப்பேசாதே பேய்மகனேடாநீயே

6 எல்லோரும்கண்டு சிரிக்கப்போரார் எந்தனைவையாதே
ஆண். அடிநிந்தனை செய்யாதே என்சொந்தமானமாதே
என்நேரமும்தொணுதொனென்று உன்வள்ளளைக்காட்டாதே

7 அடிக்கவந்து காலைஓங்கி ஆளைமிரட்டாதே
பெ உன் அன்பாக்கைக்காட்டாதே என் அப்பன்கண்டால்தீதே
தடிகப்பு பூசைவாங்கப்போராய் தள்ளிப்போடாஇப்போதே
8 குச்சுக்காரிஉன் கூட்டமெல்லாம் மெச்சிக்கொள்வதாரு
ஆண், கூரு அவர்கள்வேரு நீகொண்டுவந்துசீரு
வச்சுக்கொண்டுஉன்கணக்கையெடுத்துவந்தென்னிடப்பாரு

9 என்னிடத்தில்இருந்தயினிப்பு இன்றேடேகசப்பாச்சா
பெ—இதுவும்நல்லபேச்சா என்னைஎசக் காலமறச்சா
நான்பண்ணிப்போட்டநகைகள் எல்லாம்பரிக்கமனமாச்சா இ

10 பாடுபட்டபணத்தைபோட்டு பண்ணிப்போட்டேன்நகைகள்
ஆண்.பரிக்தளித்தேன்வலையல் அதுபஞ்சவர்ணவளையல்
நேடுகெட்டலவண்டிமகளே கொடுத்துப்போடு என்நகைகள்

11 எனக்கும்உனக்கும்சரிப்படாதினி ஏண்டாஉன்னுடசோலி
பெ—இனிஇருப்பேனேஅசைநாழி என்னுடன்செய்கிறாய்கேலி
இனி எவர்கள் சொன்னாலும் கேட்கமாட்டேன்இந்தாடா
உன்தாலி

## விருத்தம்

போட்டதோர் நகைக ளெல்லாம் பொட்டெனகழட்டிமங்கை-கேட்டதோர் புருஷன்கையில் வாட்டமாய் கொடுத்த பின்பு தாட்டமாய் புருஷன் நாகனுக்கு கோபம்வந்து ஓட்டமாய் ஓடிவந்து காலால் உதை உதைத்திடித்திட்டானே

## கும்மி

1 நின்ற நிலையில் உதைத்திடயவள்
நிலத்தில் கீழே விழுந்திடவும்
மண்டைஉடைந்து காயப்பட்டதினால்
மாமன்மைத்துனன் சண்டைபோடலாச்சு

2 கம்பும் தடியும்மெடுக்க லாச்சுபெருங்
கலகம்போலே யுண்டாகிப்போச்சு
ஏண்டாஎன்மகளை நீயடித்தாய்
என்று இவனைப்பிடித்து உதைக்கலாச்சு

3 இந்த விதம் சண்டை யாகிப் போச்சு
ஜனங்கள் எல்லாரும் வந்து விலக்கலாச்சு
ஏண்டா என் அக்காளை நீ யடித்தாயென்று
வெட்டிக் குடுமி பிடிக்க லாச்சு

4 எந்தன் பணத்தைக் கொடுத்துக் குடித்திட்டால்
இவளுக் கேண்டா ராங்கிப் பேச்சு
உங்கள் பணமா குறைந்து போச்சு
இந்த ஊரில் உள்ளவரே நீங்கள் சாட்சி

5 குழந்தைப் பேச்சுப்போல் பேசாதடா
உந்தன் கோட்டுச் சட்டங் களைக்
காட்டா தடா அந்த அளந்த மூத்திர
தண்ணீர் குடித்தால் ஆயாள் அக்காள் தெரியாதடா

6 மானங் கெட்டுப்போன மட்டிப் பயலே
என் மகளை நீயும் அடிக்கலாமா
ஆனுவத்தைக் காட்டிக் கள்ளு வெறியினால்
அருமை மகள் மண்டை உடைக்கலாமா

7 வறண்ட கிழ்வி நாற முண்டை இங்கே
வந்தது உன்னாலே இந்தச் சண்டை
முரண்டு தனமாய் நீ வளர்த்ததினால்

மோதி உடைந்தது அவள் மண்டை

8 முண்டச்சி பெற்ற முறட்டுப்பயலே நீ
மண்டலத்தி லனி யாய முண்டா
கண்டவர் நின்றவர் கேலி செய்யப் பெரும்
சண்டைகள் செய்வதும் நீதி உண்டா

9 பத்தாவுக்கேற்ற பதிவிரதையானால்
எத்தாலும்கூடியே வாழலாலே
பெற்றதாய் தந்தையர் உத்தமரேயானால்
பேதமைப்புத்தி நடவாது

10 ஆட்டத்தைதானே அடக்குவேண்டா
என்றுதோட்டத்து துரையவர்க்கேசொல்ல
அவர்கேட்டதுகைமாசி போட்டுக்கொண்டு
அவனை கோட்டுக்குத்தானே அனுப்பிவிட்டார்

11 கோட்டுக்குமுன்னலே போகையிலே
கள்குடித்தவெறியும் அடங்கிப்போச்சு
கேட்டகேள்விக்குப் பதிலொன்றும்சொல்லாமல்
கீழும் மேலும் முளிக்கலாச்சு



## நொண்டிச்சிந்து

நீதி யறிந்தவரே யிந்த நினைவில்லா நாகனுட சேதியைக் கேளும்
நீதவான் முன்பாக இவனை நிறுத்தியே வாதிசொல்லு நிஷமோ
வென்றார் எனக்கொன்றும் தெரியாது என்னை எல்லாரும் கூடி
என்னையடித்தார் யென்றான்கள்ளுக்குடியனென்றுயென்னைக்கண்
டவர்களெல்லாம் பேசி நகைத்தார் என்றான் என்வீட்டுமனைவி
யிடப் சோறு கேட்டேன் எனக்குத்தர மாட்டேனென்றாள் பசி
யதுபொறுக்காமல் நான்அந்தப் பாவிமகளைக்காலா லுதைக்கஅதை
கேட்டு யிருந்து எந்தன் மாமா எங்கள் தோட்டத்து துரையிடம்
முறையிடவே என்னை கோட்டுக்கே அனுப்பிவிட்டார் கூட்டிவந்த
ஆளைத்தேடி கேட்டுப்பாருங்கள் குற்றமொன்றும் செய்யவில்லை
யேநான் கூலிக்காரன் வேலைசெய்யும் ஏழையென்றான்நீதவான்இவ
னைப்பார்த்து நீநெடுநாளாய் இந்தப்படிசெய்தாயோ என்றார் பாரா
ளும்துரைராஜாஎனக்குப்பத்துவயதுக்குப்பின்னால்பழக்கமென்றான்
ஊராரைக்கேட்டுப் பார்த்தால் நான்யிருந்த ஒழுங்குக ளெல்லாம்
சொல்லிக்காட்டுவா ரென்றான் இரண்டுபேர் சாச்சியைக் கேட்க
இவன் எந்தநாளுஇந்தப்படி செய்குறானென்றார் முறண்டுத்தனம்.
செய்ததால் உனக்கு மூன்றுமாதம் மறியல் என்றுமுடித்துவிட்
டார் அறிவில்லா நாகனவன் அழுத கண்ணீருடனே அறையில்
சென்றான்

கணக்குநாள் முடியும்வரை இவன் கடினமாய் வேலைசெய்துகாலம்
கழித்தான் குடிகாரப்படுபாவி இவன் .'கொஞ்சமேனும் கடவுளை
நினைக்காமலே தடிக்கம்புப்பூசைவாங்கினான் கள்ளுத்தண்ணியைக்
குடித்து இந்தப்படியே ஏங்கினான் இந்தியநேசர்களே நீங்கள்
யிலவுகள்ளைக்குடித்துப் பழகாதீர்கள் சந்திக்குச்சந்தி திரிந்து

சனியன் பிடித்துத்துண்பம் அடையாதீர்கள் செந்தமிழ் மொழியு யர்ந்து பீ. எம். செல்லையா சொன்னகவிதைய நீங்கள்அறிந்து சந் தோஷமாகவே வாழ்வீர் புவி ஷண்முகநாதனுட அருள்புரிந்து

தந்தின தன தன னு

## காலத்தைப்பாராய் (என்ற மெட்டு.)

1 பழுதுசொல்லாதீர் உள்ளதைநான
சொன்னேன் பகடிசெய்யாதீர்

2 தொழுதுகடவுள்பாதம் துதிசெய்துபணிந்தாக்கால்
பழுதற்று வினையற்று பாகதி அடையலாம்

3 அளவுக்குமிஞ்சின ஆசைமனதில் வைத்து
அடுத்தோரைவஞ்சித்து ஆஸ்தி அதிகஞ்சேர்த்து
பலபலதொழில்செய்து பணத்தைஅதிகஞ்சேர்த்து
உலகத்தில் வெகுகாலம் புகழ்பெற்று இருந்திட
ஊக்கங்கொண்டீரோ இரவுபகலும் பொருள் ஏக்கங்கொண்டீரோ

4 ஏக்கங்கொண்டுபொருள் ஏராளமாய்த்தேடி
எழியோரைக்கண்டதும் வாசல்கதவைமூடி
போக்கற்றஆசையால் பூமிமுழுதும் ஓடி
போட் வயின் பிராந்திகள் சாராயக்கடைதேடி
குடிப்பதும்சரியா கடுகடுத்துக் கோபமெடுப்பதும்வெறியா

5 மதுபானங் குடித்ததால் மதிகெட்டிப்போச்சுது
மாடுஆடுகள்போலே முறைகெடலாச்சுது

மருமாதர் ஆசையால் கெர்வங்களாச்சுது
குருவென்றபெரியோர்சொல் வெருத்திடலாச்சுது
நீர் அறிவீரே மனுநீதிசாஸ்த்திரனால் தெரிந்தோரே பழு

6 முந்தி யுகத்தார் செய்த முறைஎங்கேநடக்குது
முறைவரையில்லாத மோடிகள்நடக்குது
மறைமனுசாஸ்திர விதி எல்லாம் கெடுக்குது
மருட்பேய்கள்பெருமையை மனதிர்க்குக்கொடுக்குது
இடங்கொடுக்காதீர் நல்லறிவானதை கடன்கொடுக்காதீர்

7 அழியும் உடலைநம்பி ஆசைவைக்கலாலாமா
பழிவாங்கும் எமனை பாய்ந்துஜெயிக்கலாமா
வழிகண்டு அறியாமல் வாடிமயங்கலாமா
சுழிமுனை உடலுக்குச் சொந்தமாகிப்போமா
மிகப்பெரியோரே பாரில்இதைக்கொஞ்சம் கவனித்துப்பாரே

8 இன்றிருப்பவர்நாளை இறந்துபோவாரென்று
எண்ணுமல்பொருள்தேடி எங்கேபோவார்கொண்டு
முன் இருந்தவர்போனவழியை நாமள்கண்டு
மூத்தோர்இளைஞரென்று முறைதவறிநின்று
மோடிசெய்தீரே முன்பின் யோசிக்காமல்மோசம்போனீரே

9 தன்னைத்தான் அறியாத மூடர் அனேகமுண்டு
தரணியில்மர்மம் தெரியாமலேநின்று
கண்ணுந்தெரியாமல் காதும்கேளேனென்று
தன் அழகைக்கண்டு தலையை ஆட்டிக்கொண்டு
இருந்துகொண்டீரே சிருஷ்டித்த கடவுளை மறந்துநின்றீரே

10 பணப்பேய்கள்உலகத்தில் பலகூத்தும் ஆடுது
குணத்தைக்கெடுத்து வாய்பேசாமல்மூடுது
கணக்குப்பார்த்துநிதம் கண்களைமூடுது
கால்யிருந்தும் நடக்க கார்வண்டிதேடுது
பாரினில் தொல்லை கண்ணிறல் யேழையைபார்ப்பதும்இல்லை

11 பாவபுண்ணியமென்று பார்த்துநடக்குதில்லை
பகலும் இரவும்மென்ற திடமும் மனதில்லில்லை
அகங்கொண்டுஉலகத்தில் செய்யாததொழிலில்லை
ஆனாலும் ஒருயிடம் ஒருகாலம் நிலையில்லை
இதற்குமுன்இங்கேஎண்ணிக்கையில்லாமல்யிருந்தபேர்எங்கே

12 கடைகள்பெருத்துநல்ல வியாபாரம்நடக்குது
நாடெல்லாம்வெளியாகி தினம்லாபம்கொடுக்குது
கண்டஇடங்கள்எல்லாம் சண்டைபோர்தொடுக்குது
காலத்திற்கேற்றாப்போல் கோலங்கள்நடக்குது
இதுசொன்னால்வாதோ யாரில்லைஎன்றாலும்பாரறியாதோ

13 நல்லகுணசீலன் போலவேகாட்டுது
நாடெல்லாம்ஓடி பொருள்தேடிவாட்டுது
உள்ளேபகையும் உதட்டன்புகாட்டுது
ஊரைஅடித்து உலையிலேபோடுது
எல்லோரும்கண்டுபுவியில்நடக்கும் குணம்சொல்வீரே இன்று

14 கர்மியானவர்இடம் காத்துக்கிடக்குது
தர்மவான் தன்னிடம் தங்காமல்நடக்குது
வர்மங்கொண்டவர்களை வாட்டிக்கெடுக்குது

வஞ்சகம் சூதுகள்            மனதிற்க்கு கொடுக்குது
இதில் என்னலாபம் என்மீதினில்            எடுக்காதீர்கோபம்
15 சமுசாரி தாசியும்            வேசமொன்றாகுது
சர்வகுலங்களும்            முறைகெடலாகுது
சண்டாளப்பெண்களால்            திண்டாட்டம்மாகுது
சனியன்பிடித்துக்கெட்ட            பிணியைக்கொடுக்குது
எண்ணாலும்            தூக்கம்
பெண்புத்திபேதமை            சொன்னாலும்வெட்கம்
16 மணவனைபோகுமுன்            யாப்பிளைகளைக்கூடி
மறைவாகத்தினம்தேடி            மருவிவிளையாடி
மாலைதரித்துத்தாலி            கட்டினமூன்றாநாள்
மதலையைப்பெற்று            மகிழ்ந்துகொண்டேஆடி
மல்லுகள்            தொடுத்தாள்
மதிகெட்டஆண்பிள்ளை            மனதைக்கெடுத்தாள்
17 தொல்லுலகில்பெண்கள்            வள்ளலைச்சொன்னாலும்
எல்லோரும்எந்தனை            ஏசுவார்எண்ணாலும்
பொல்லாதஅவிசாரி            உலகத்தில்எண்ணாலும்
போக்கிறித்தனம்செய்வாள்            புத்திகள்சொன்னாலும்
நம்பினால்            மோசம்
உலகத்தில் வெகுகோடி            அடைந்தாரேநாசம்
18 முண்டைகள்முலைகாட்டி            புருஷனைத்தேடியே
முகத்தைதமினுக்கிக்கொண்டு            மூலையைநாடியே
கொண்டைமினிக்கிக்கட்டி            குரலோங்கிப்பாடியே
அண்டைவீட்டுப்பையனை            ஆசையாய்கூடியே
காலங்கழித்தாள்            கண்டுகேட்டால்புருஷன்
நின்று            முளித்தாள்

19 வஞ்சனையாய் சொல்ல மனமே எனக்கில்லை
வழக்கத்தைச்சொன்னாலும் வருகுமோபெருந்தொல்லை
அஞ்சாமல்கடைத்தேர வழியுநமக்கில்லை
நெஞ்சம்புண்ணாகியே நேருதேபெருந்தொல்லை
சஞ்சலந்தானே தரணியில்
இவர்களை நம்பினால்வீணே

20 தெய்வத்தைநினைத்தாலும் தீங்குகள்நடக்காது
பொய்சொல்லிஅனியாயம் செய்வதும்அடுக்காது
திருட்டுத்தனம்செய்தால் ஜெயம்பெறக்கொடுக்காது
தீமெசெய்தால்மோக்ஷ வழிகாட்டிக்கொடுக்காது
நல்வழிகண்டு ஆலோசனைசெய்து
நாடுவீர் இன்று

21 சீருரும்உலகில்நூல் தெரிந்தபெரியோரே
பேருரும்புகழ்பெற்ற பெரியபணத்தோரே
காராருங்குணத்தோரே கதித்தபெரியோரே
கருணைபுரிந்திந்தக் கதையைப்படித்தோரே
பார்தன்னில்கூடி பீ, எம். செல்லையா
சொன்ன பதங்களைப்பாடி
பழுதுசொல்லாதீர் உள்ளதைநான்
சொன்னேன் பகடிசெய்யாதீர்

## இலங்கை தேயிலைத் தோட்ட வழிநடைப் பதம். 26

1 கண்டறிந்துபாருங்கள் கடவுளண்டைசேருங்கள்
கருணைபுரிந்து கருத்தில்நினைந்து க

2 அண்டர்தொழுகின்றநாதன் அருமறைகள்சாற்றும்நீதன்
ஐயன் மெய்யன் துய்யன் அருளை க

3 வேறுதுணை ஆருமில்லை காருந் துயர் தீரும்என்று
வேதன் போதன் நாதன் அருளை க

4 நீதிஎன்பதில்லையா நின்னை அடுத்து தொல்லையா
ஆதிமூர்த்தி அவர்க்கேகீர்த்தி
அறிந்து அவரை தெரிந்துகொள்ளுங்கள் க

5 மண்ணில்மகிமைஎல்லாம் மன்னவர்கண்டுமகிழ்ந்து
மதியைப்புகழ்ந்து விதியைமறந்து
கெதியையடைந்த பலனைசொல்கிறேன் க

6 பாடுபட்டுப்பொருள்தேடி கேடுகெட்டுப்போனார்கோடி
பரமனருளைத் தினமும்துதித்தால்
பாக்கியம் பெருகி யோக்கியனாகலாம் க

7 இனஜனபந்துக்கள்கூட்டம் இருப்பிருந்தால்கொண்டாட்டம்
இல்லையென்றால் பீ. எம். செல்லையா சொன்னதை
என்றும்கவனித்துக்கண்டு கொள்வீர் நீங்கள் க

## இந்த உடலைநம்பி யிருக்கலாமா (என்ற மெட்டு)

1 ஆசையாய்யிந்தஉடலைநம்பி இருக்கலாமா
பசித்துஅன்னம்மென்றோரைத் துன்பம்செய்யலாமா
அண்டபுவனங்களை உண்டாக்கினாநாதனை
அறிந்தும்அவரைநாமள் மறக்கலாமா ஆ

2 கர்மியென்றும் பேரெடுத்திருக்கலாமா
வெகுகஷ்டப்பட்டு தேடும்பொருள் கூடப்போமா
வருமைகொண்டவர்கட்கு வருங்கெதிதெரியாமல்
வாழ்வைச்சதமென்றெண்ணி இருக்கலாமா ஆ

3 விலைமாதர் மீதிலாசைப்படலாமா பட்டு
வேசம்குலைந்துநாமள் கெடலாமா
வெண்ணீரைவிட்டுவிட்டு ரணங்களைக்கழுவியே
கண்ணீரைவிட்டுக்கொண்டு அழ லாமா ஆ

4 உண்டவீட்டுக்கு ரெண்டகஞ்செய்யலாமா
இந்தவுலைமையன்கண்ட கனவைச்சொல்லப்போமா
கொண்டவன்வருகுமுன்னே கண்டவனோடுகலந்த
கோதையரைத்தஞ்சமென்றே, யெண்ணலாமா ஆ

5 கூலிவேலைசெய்து கடைத்தேறலாமாசொல்லும்
கூத்தாடும்ராஜனுக்குச் செங்கோலாமா
வாலிபமானவர்கள் வயதோரைகைத்திட
வல்லவனென்றேநமனை வெல்லப்போமா ஆ

6 நானேகெட்டிகாரன் என்றுதுள்ளலாமா
நல்லோரைநா வழித்திடச்சொல்லபோமா
இல்லையென்றுதலை விதியைவெல்லப்போமா
பீ. எம். செல்லையாசொன்ன கவியைதள்ளலாமா ஆ

## திருப்புகழ்ச் சந்தம்

1 அவனிமுழுதும்கட்டி அரசாண்டிருந்தாலும்
அதிலென்னசுகபடி மானே
படிமீதில் அறஞ்செய்யாப் பாவிகள்தேடும் பொருள்
குடிகொண்டிருக்கும் அதுவீணே
2 இகபோகசுகங்கண்டு இதுவேசதமென்று
இருப்பதும் உலகத்தில்கேடு
என்னை றக்கும் எமன்கையில் அகப்பட்டுக்கொள்வோமென்று
எண்ணிக்கொண்டு பொருளைத்தேடு அ
3 நடைப்பிணந்தானே நீயும் கடைவழிதெரியாமல்
நல்லோரைப் பழிப்பதும்தீது
இடையில்துணியில்லாமல் பிறந்தோமென்றறியாமல்
இருக்கும்மாளிகை உனக்கேது ஆ
4 தனதான்யவாழ்வினுல் சகலரும்உன்னைக்கண்டு
தலைகுனிந்து பணியகாணும்
தலைமீதுதணிகையில் வாழும்நமதுஉயிர்
கடவுள்கிருபையல்லோ வேணும் அ
5 எத்தனைநாள்உயிருடே மெத்தைமாளிகைகட்டி
இருந்துகார்எரிக்கொண்டு பாந்துநீதிரிவதினுலே
இவ்வுலகஆசைவிட்டு எல்லாப்பொருளும்கெட்டு
இறப்பது நிச்சயந்தான் கேளே அ

6 உற்றார்பெண்டுகள் பிள்ளை பெற்றார்உறவினர்கள்
செத்தாலும் கூடவருவாரோ
இத்தலத்திலும்உள்ள இனபந்துஜனங்களும்
இருந்தாலும் உனக்கவர் ஆரோ அ
7 வல்லவன் நானேயென்று நல்லஉணவுகள்தின்று
கல்லுப்போல் வளர்த்திட்ட தேகம்
கொல்லுலகில் புகழ்பெற்று சொல்லாமல் நாசிக்காற்று
செல்லும்போது நாற்றப்பிணமாகும் அ
8 தருணம்அறிந்துசில யேகளுழைதவிசெய்து
தருமங்கொடுத் திடாதகாசு
அருமையெனவே அதை பெருமையாகவேகட்டி
அடைகாத்திருக்கும் பிசாசு அ
9 ஜெகமெல்லாம் புகழ்பெற்று இருந்தாலுமுனக்கென்ன
சேருமோவெகு கோடிலாபம்
அகங்கொண்டலைவது ஆண்டவர்க்கடுக்காது
ஆனல்வருமேபெரும் பாவம் அ
10 ஆதியும் அந்தமும் நிறைந்தவன் பறந்தவன்
ஆரென்று நீ அறிந்து சோதி
அறிந்து நீ நம்செல்லையா தெரிந்துசொன்ன கவிகள்
ஆனாலும் நடக்கது நீதி அ

(லாவணி மெட்டு)

1 இலங்கைதேயிலைத்தோட்ட வழிநடைப்பதம் பாடி
எருவேய்கோர்நாடி எழுந்துவாடி என்னுடன்கூடி
எந்தன் யிளமையிலே உந்தன் மனமும் குணமும் கண்டேன்
இருபேரும் ஒருஜோடி

2 இந்தியாதேசம் இருந்து இலங்கைதேசத்தில் வந்து
செந்தமிழ்நேசரைக்கண்டு சிறப்பாய்நின்றுசெப்பினேனின்று
அவர்கள்சிந்தைகலங்கி எந்தவேளையும்
ஏழையாய் செய்யும் தொழிலைக்கண்டு

3 கண்டுசொன்னதால்சிலர் மண்டையில்மூளைவறண்டு
கருத்தில் நினைக்காமலே சிருத்தாப்போலே வெருத்தென்மே
லே காரியந்தெரியாமலே வீணாகநாளைப்போக்கிக்
கழிப்பாரோ இனிமேலே

4 கரைகண்டும் வெளியேற மனமில்லாதிருப்பது
கடைசியில்பெருந்தீது சுகமேது இந்தப்புவிமீது
முறையுடன் நடைபெற முடியாதென்றே
சிலர்மொழிவாரே வீண்வாது

5 வீண்வாதுசெய்தவர்க்கு விளையும்கர்மவினைகள்
வேதத்தை நீபாரு விளையும்சீரு பிளையோபாரு
எந்தன்மான்விழியாளே உந்தன் அழகுக்குயிணையான
மங்கையர் இனியாரு

6 பூரணசந்திரன்போலவேஜொலிக்குது பூவையுண்முகஞ்சிவந்து
புகழ்வேன் உகந்து பொருளும்மிகுந்துநீயும்
காரணந்தெரிந்து சில நீதியை யுணர்ந்துபாரு
கடவுள் அருள் புரிந்து

7 சிறந்த தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டை என்பது
தேசத்தின் முதல்பேரு சீரான ஊரு சென்றுநீ பாரு
நான் பிறந்தவிபரங்களைத் தெரிந்துகொள்ளஉனக்கு
பேசுதே மருசிரு

8 ஆய்ங்குடி தென்புரம் மங்கை நாட்டை அடுத்த
அன்னமே முதுகாடு அறிந்து தேடு சிறந்தநாடு அதில்
அற்புதமாய் ஓடுபோட்டு அழகாகத்
துலங்குதே அது தான்என்வீடு

9 வீட்டுக்குநேர்கிழக்கே செல்லிஅம்மாள்கோவில் உண்டு
கேட்டால் சொல்லுவார் மானே அடியென்தேனே
பாட்டுக்கச்சேரி யுடன் திருவிழா
நடப்பதைப்பாரடி என்மானே

10 சிவந்த பெருமாள் என்பிதாவெனபுவிமீதில்
செப்புவாரடிமானே சீருடன்மானே சிறந்துதானே
ஜெகமெல்லாம் புகழ்பெற்று வெகுகாலம்வாழ்ந்திட்டி
சீமான் அவர்தானே

11 கண்ணேஎனது பெயர் பீ எம் செல்லையாவென்று
கருத்தில்நினைந்து கருணைபுரிந்து கவியால்தெரிந்து
நீ என்னாளும் பதம்பாடி சுகமாய் இருக்கவேணும்
இறைவன் அருள் புரிந்து

12 நீடுபெரு இலக்கண இலக்கியம் அறிந்ததால்
நீ ஒரு புத்திசாலி நிறைந்தால்வாழி சிறந்த தாலி
உனக்கு நெடுநாளும் புகழ்பெற வாமருள்
கடவுளும் நேசர்களும் வாழி

இலங்கை தேயிலைத்தோட்ட வழிநடைப் பதம்.
முதற்பாகம் முற்றிற்று

இனி கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்
இரண்டாம் பாகத்தை
எதிர்பாருங்கள்.

---


# பீர். அச்சியந்திரசாலை.

## நிர். 3, புரௌன்ரிக் வீதி, கண்டி.

அன்புடையீர்!

இவ்விடத்தில் தமிழ், இங்கிலீஷ், சிங்களம்,
இவைகளில் தேவையான அச்சு
வேலைகள் சுத்தமாக குறிப்பிட்ட
நேரங்களில் குறைந்த விகிதப்
படிசெய்து கொடுக்கப்படும்

குறிப்பு:- வெளியூர் ஆர்டர்களை பிரத்தியேகமாய்க்
கவனிக்கப் படும்.